DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.1 MADURANTAKAM

Calender : CC 17/2025

Miscellaneous :

Sessions : PW 2

Deposition of Witness for

**எதிரி ஆஜரில்லை எதிரி தரப்பில் 355 BNSS ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

| | |
|---|---|
| Name | ராமச்சந்திரன் |
| Father / Husband Name | வடிவேல் |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of 10.06.2026

**புகார்தாரர் தரப்பில் முதல் விசாரணை:**

1. நான் தற்போது ESAF வங்கியின் மதுராந்தகம் கிளையில் மேலாளராக பணிபுரிந்து வருகிறேன். இந்த வழக்கில் சாட்சியம் அளிக்க எனக்கு அழைப்பாணை வந்தது. அழைப்பாணையின் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். என்னிடம் காட்டப்படும் இந்த வழக்கின் இரண்டு காசோலைகளும் எங்கள் வங்கியின் காசோலைகள் தான் என்றால் சரிதான். இந்த இரண்டு காசோலைகளும் சீதாராமனுக்கு வழங்கப்பட்ட காசோலைகள் என்றால் சரிதான். வழக்கு காசோலைகள் இரண்டும் அதில் குறிப்பிட்டுள்ள தேதியில் செயல்பாட்டில் இருந்தது என்றால் சரிதான். அதில் குறிப்பிடப்பட்டுள்ள தேதியில் சீதாராமனின் வங்கியில் காசோலையில் குறிப்பிட்டுள்ள தொகை இல்லை என்றால் சரிதான். ஆனால் காசோலையில் கண்ட கையெழுத்து ஒத்துப்போகவில்லை என்பதால் தான் திருப்பப்பட்டது.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

2. சீதாராமன் எங்கள் வங்கியின் வாடிக்கையாளர் தான். அவர் எந்த தேதியில் எங்கள் வங்கியில் கணக்கு தொடங்கினார் என்றால் 2023 ம் ஆண்டு தொடங்கினார், ஆனால் தேதி மாதம் ஞாபகமில்லை. எனக்கு வந்த அழைப்பாணையில் அந்த விவரங்களை பார்த்து வரசொல்லி குறிப்பிடப்படவில்லை. சீதாராமனின் வங்கி கணக்கு என்றால் சேமிப்பு கணக்கு. இந்த காசோலைகளான 000002 மற்றும் 000003 ஆகிய இரண்டு காசோலைகளும் வாடிக்கையாளரின் கையொப்பம் மாறுபட்டிருந்ததால் தான் திருப்பப்பட்டுள்ளது என்றால் சரிதான். காசோலையில் கண்ட கையெழுத்தையும், வாடிக்கையாளரின் வங்கி கணக்கில் உள்ள கையெழுத்தையும் ஒப்பிட்டு பார்த்து தான் திருப்பியுள்ளோம் என்றால் சரிதான்.

3. ஒருவருடைய காசோலையை வேறொருவர் எடுத்து கையொப்பம் போட்டு வங்கியில் தாக்கல் செய்ய வாய்ப்பு உள்ளதா என்றால் அவருடைய காசோலை எப்படி காணாமல் போனது என்று எனக்கு தெரியாது, அப்பாடி தொலைந்திருந்தால் அவர் Stop

Payment கொடுத்திருந்தால் நாங்கள் நிறுத்திவைத்திருப்போம். காசோலையில் கண்ட தேதியில் எதிரியின் கணக்கில் போதிய பணம் இல்லை என்பதை காட்ட எதிரியின் வங்கி கணக்கின் Statement–ஐ தாக்கல் செய்ய முடியுமா என்றால் கேட்டால் தரலாம்.

DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.1 MADURANTAKAM

Calender : CC 17/2025

Miscellaneous :

Sessions : PW 3

Deposition of Witness for

**எதிரி ஆஜரில்லை எதிரி தரப்பில் 355 BNSS ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

| | |
|---|---|
| Name | உதயகுமார் |
| Father / Husband Name | கன்னியப்பன் |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of 10.06.2026

**புகார்தாரர் தரப்பில் முதல் விசாரணை:**

1. நான் தற்போது AXIS வங்கி மதுராந்தகம் கிளையில் துணை மேலாளராக பணிபுரிந்து வருகிறேன். இந்த வழக்கில் சாட்சியம் அளிக்க எங்கள் கிளை மேலாளருக்கு அழைப்பாணை வந்தது. அவர் அலுவலக பணியாக உள்ளதால் என்னை இந்த வழக்கில் சாட்சியம் அளிக்க சொன்னார். என்னிடம் காட்டப்படும் இந்த வழக்கின் இரண்டு காசோலை திருப்புதல் மெமோக்களும் எங்கள் வங்கியால் வழங்கப்பட்டது என்றால் சரிதான். அந்த காசோலைகள் எந்த தேதியில் செலுத்தப்பட்டு எந்த தேதியில் திருப்பப்பட்டது என்றால் 20.11.2024 அன்று செலுத்தப்பட்டுள்ளது. 21.11.2024 அன்று திருப்பப்பட்டுள்ளது. திருப்பப்பட்டதற்கான காரணம் கையெழுத்து ஒத்துப்போகவில்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

2. என்னிடம் காட்டப்படும் இரண்டு காசோலை திருப்புதல் மெமோகளிலும் காசோலைகள் 21.11.2024 அன்று திருப்பப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். காசோலை எண்.000003-க்கான காசோலை திருப்புதல் மெமோ கணினி மூலம் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதில் வங்கி மேலாளரின் முத்திரை உள்ளதா என்றால் உள்ளது. அதில் உள்ள கையெழுத்து எங்கள் வங்கியின் மேலாளரின் கையெழுத்தா என்றால் இல்லை, காசேலை திருப்புதலை கையாலும் வேறு அலுவலர் போட்டுள்ளார். காசோலை எண்.000002-க்கான திருப்புதல் மெமோ கையால் எழுதிக்கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். எதற்காக தாக்கல் செய்யப்பட்ட இரண்டு காசோலைகளுக்கு வேறு வேறு விதமாக மெமோ கொடுத்துள்ளோம் என்றால் Print தவறாக வந்துள்ளதால் கையால் எழுதிவிட்டோம். Print தவறாக வந்தது என்பதை காட்ட ஆவணங்கள் ஏதாவது கொண்டுவந்துள்ளேனா என்றால் இல்லை.

3. எங்கள் வங்கி மேலாளரை விசாரணை செய்தால் Print தவறாக வந்ததா இல்லையா என்பது தெரியவரும் என்றால் சரிதான். இந்த வழக்கின் இரண்டு

காசோலைகளும் கையெழுத்து மாறுபட்டுள்ளதால் திருப்பப்பட்டுள்ளது என்றால் எங்களால் அதை சொல்லமுடியாது, ஆனால் காரணம் அவ்வாறு தான் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த வழக்கில் எங்களின் கிளை மேலாளர் தான் சாட்சியம் அளிக்க வேண்டும் என்றாலும், எனக்கு சாட்சியம் அளிக்க எந்த அதிகாரமும் இல்லை என்றாலும் சரியல்ல.